செ.வெ.எண்:27

நாள்:10.01.2011.

# பத்திரிகை செய்தி

மீன்பிடி படகுகள் கடலில் தொழில் செய்யும் பொழுது ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி உடனுக்குடன், இந்திய கடலோர காவல் படை கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கும் நவீன அவசரகால உதவி கருவி ஒன்றினை (DISTRESS ALERT TRANSMITTER) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வடிவமைத்துள்ளது. இக்கருவி செயற்கை கோள் உதவியுடன் படகு இருக்கும் இடத்தின் இருப்பிடத்தை அறியவும் மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் நேரத்தில் அவசர காலங்களில் படகில் தீ விபத்து ஏற்பட்டாலோ, படகு மூழ்கினாலோ, மருத்துவ உதவி தேவைப்பட்டாலோ அல்லது பிற மனிதர்களால் துன்புறுத்தப்பட்டாலோ இந்த கருவியை இயக்கிய உடன் சென்னையிலிருக்கும் இதற்கான கட்டுப்பாட்டு மையத்தில் செய்தி பெறப்பட்டு, இந்திய கடலோர காவல் படை வான் வழியாக மீட்பு பணியினை மேற்கொள்ளும். இக்கருவியை இந்திய கடலோர காவல் படை முற்றிலும் இலவசமாக வழங்குகிறது.

இத்தகைய நவீன வசதி படைத்த ஆபத்து காலத்தில் மீனவர்களுக்கு உதவும் 26 கருவிகள், சென்னை மீன்பிடி விசைப்படகு மீனவர்களுக்கு தமிழக மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு.திரு.K.P.P.சாமி அவர்களால் 10.01.2011 அன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கடலோர காவல்படை தமிழக தலைமை அலுவலர் திரு.எஸ்.பி.ஷர்மா ஐ.ஜி. அவர்களும், கமாண்டன்ட் திரு.பங்கஜ்வர்மா அவர்களும், மீன்துறை இயக்குநர் திரு.கே.செல்லமுத்து இ.ஆ.ப., அவர்களும் மீன்துறை இணை இயக்குநர் திருமதி.ஷே.நூர்ஜஹான்பீவி அவர்களும், சென்னை மண்டல மீன்துறை இணை இயக்குநர் திரு.ஜி.ஆறுமுகம் அவர்களும், சென்னை மீன்பிடி துறைமுக மேலாண்மைப்பிரிவு, மற்றும் கடல்வளம் மீன்துறை உதவி இயக்குநர்களும், மீன்வளத்துறை அலுவலர்கள் மற்றும் சென்னை விசைப்படகு மீனவர் நலச்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு, இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

10/1/11